## <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>
## <u>O.S.No. 496 /2021</u>

18.11.2025 பி.வா.சா.1 திரு. பாலமுருகன்

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது தாத்தா பெயர் சப்பாணி என்றால் சரிதான். சப்பாணி உடன் பிறந்த சகோதரி பெயர் தங்கம்மாள் என்றால் சரிதான். தங்கம்மாள் கணவர் பெயர் அழகுமுத்து என்றால் சரிதான். அழகுமுத்துவிற்கு உடன் பிறந்தவர்கள் விவரம் எனக்கு தெரியுமா என்றால தெரியாது. அழகுமுத்துவின் சகோதரர் மகள் எங்கள் ஊரில் உள்ள முத்தம்மாளை தெரியுமா என்றால் தெரியாது. சப்பாணி என்பவருக்கு எனது தந்தை மாடசாமி, வாதி, இறந்து போன சுப்பையா, பார்வதி, புதியாள், சங்கரம்மாள் ஆகியோர்களும் இரண்டாவது மனைவி மூலம் இரண்டு குழந்தைகளும் வாரிசுகள் என்றால் சரிதான்.
2. தங்கம்மாள், கணேசன் ஆகியோர்கள் ஒரே வீட்டில் குடியிருந்தார்கள் என்றும் அவர்களுக்கு ரேஷன் கார்டு வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. **அசல் வழக்கு எண். 150/2024 ல் நான் வாசா.1 ஆக விசாரிக்கப்பட்ட போது தங்கம்மாள், கணேசன் அனைவரும் ஒரே வீட்டில் குடியிருந்து குடும்ப அட்டை வழங்கப்பட்டிருந்தது என்றால் ரேஷன் கார்டு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அசல் வழக்கு எண். 150/2024 ல் வாசா.1 குறுக்கு விசாரணையில் மேலே கூறப்பட்ட பகுதி மட்டும் வாசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
3. மேலகுன்னத்தூர் சர்வே எண். 533/2 ல் 1 ஏக்கர் 28 செண்ட் எனது அனுபவத்தில் உள்ளதா என்றால் பாதி மட்டும் எனது அனுபவத்தில் உள்ளது. மேற்படி நிலமான தங்கம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தங்கம்மாள் மேற்படி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து எந்தவிதமான ஆவணத்தையும் எனக்கோ எனது தந்தைக்கோ எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான்.
4. மேலக்குன்னத்தூரில் சர்வே எண். 229/58 ல் மச்சி வீடு 229/59 ல் காலிமனையானது என் பெயருக்கு தங்கம்மாள் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான் ஆனால் அதற்கு பணம் எதுவும் தங்கம்மாளுக்கு

கொடுக்கவில்லை. மேற்படி கிரைய ஆவணத்தில் பணம் செலுத்தி கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் பத்திரத்தில் அவ்வாறு தான் உள்ளது ஆனால் பணம் கொடுக்கவில்லை. மேற்படி கிரைய ஆவணத்தில் தங்கம்மாள் ஒவ்வொரு பக்கத்திலும் கைரேகை வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரத்தை தங்கம்மாள் படித்து பார்த்து அறிந்து கைரேகை வைத்துள்ளாரா என்றால் நாங்கள் படித்து காட்டினோம் அதன் பேரில் அவர் விவரங்களை அறிந்து எழுதிக் கொடுத்தார் ஆனால் அவருக்கு படிக்க தெரியாது.

5. தங்கம்மாள் சுமார் எத்தனை பதிவு ஆவணங்களை தாவா சொத்து உட்பட வேறு சொத்துகளை பொறுத்து பிறப்பித்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எதிர் வழக்குரையில் உள்ள விவரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் சென்னேன் என்றால் சரிதான். தங்கம்மாள் இறந்த பிறகு என்ன என்ன ஆவணங்களை தபசில் சொத்தை பொறுத்து பிறப்பித்த கொடுத்தார் என சார் பதிவாளம் அலுவலகம் மூலம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். தங்கம்மாள் இறந்தது 28.01.2021 என்றால் சரிதான்.

6. தங்கம்மாள் இறப்பதற்கு முன்பு மூன்றாண்டு காலம் வரை சரியான உடல் நிலையும் மனநிலையிலும் இல்லை என எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ.4 ஆனது தங்கம்மாள் வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் தபசில் சொத்து விவரத்தில் 3 வது அயிட்டமாக தாவா சொத்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரையத்தை அனுசரித்து வாசாஆ.5 ஆன பட்டா வாதி பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் அதன் பட்டா எண் 829 என்றால் வழக்கிற்கு பின்னர் மேற்படி விவரத்தை தெரிந்து கொண்டேன் ஆனால் அவர்கள் மாற்றிக் கொண்டது சரியல்ல.

7. வாசாஆ.7 ஆனது மேற்படி பட்டா எண். 829 க்கு செலுத்தப்பட்ட தீர்வை ரசீது என்று சொன்னால் சரிதான் ஆனால் தங்கம்மாள் இறந்த பின்னர் தான் மேற்படி ரசீது வழங்கப்பட்டது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மேற்படி கிரையம் சம்பந்தமாக வழக்கறிஞர் மூலம் நான் அறிவிப்பை வாதிக்கு கடந்த 29.01.2021 ம் தேதி அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி சட்ட அறிவிப்பு அனுப்பபட்ட பின்னர் மூன்று ஆண்டுகள் கழித்து 19.03.2024 ம் தேதி மேற்படி

கிரைய ஆவணம் செல்லாது என சொல்லி இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 150/2024 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

8. என்னை தவிர தங்கம்மாள் குடும்ப பிறந்த உடன் பிறந்த யாருமோ, என் தகப்பனாரின் உடன் பிறந்தவர்களோ, வாசாஆ 4 ஆன வாதியின் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான். கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்கும் போது தங்கம்மாளுக்கு உடல்நிலை சரியில்லை என்பதற்கோ மனநிலை சரியில்லை என்பதை நிருபிப்பதற்கு எந்தவிதமான ஆவணங்களும் இல்லை என்றால் சரிதான்.

9. வாதி பெயரில் உள்ள பட்டாவை நான் உட்பட எங்கள் குடும்பத்தில் உள்ள நபர்கள் யாரும் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல. திருநெல்வேலி, மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய அறிவிப்பில் தாவா சொத்தில் நான் கட்டுகுத்தகை சம்சாரியாக இருந்து வருவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது வழக்கு படி கட்டுகுத்தகை சம்சாரி என்பதற்கு யாருக்கு பாட்டம் கொடுத்தேன் என்றால் தங்கம்மாளுக்கு பாட்டம் கொடுத்தேன். எந்த வருடம் முதல் பாட்டம் கொடுத்தேன் என்றால் 2020 மார்ச் வரை கொடுத்தேன். 2021ம் வருடம் கொடுக்கவில்லை.

10. 2020ல் பாட்ட பணம் தங்கம்மாளிடம் செலுத்தியதற்கு ரசீது தங்கம்மாளிடம் நான் கேட்டேனா என்றால் நான் கேட்டேன் ஆனால் தரவில்லை. நான் கொடுக்கிற பணத்தை சரிபார்த்து வாங்கி கொள்வார் என்றால் சரிதான். மாவட்ட ஆட்சியரிடம் நான் கட்டுகுத்தகை சம்சாரி என கொடுத்த மனுவை இந்த வழக்கில் தாக்கல் செய்யாததற்கு காரணம் உள்ளதா என்றால் காரணம் ஒன்றுமில்லை. இந்த வழக்கில் எதிர் வழக்குரையில் தாவா சொத்தில் கட்டுகுத்தகை சம்சாரியாக இருந்து வந்தேன் என்று சொல்லவில்லை என்றால சரியல்ல சொல்லியுள்ளேன்.

11. எனது கட்சி படி 20.04.1959ம் தேதியிட்டு அழகுமுத்து எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் தாவா சொத்தில் எனக்கு அனுபவம் உள்ளதாக சொல்கிறேன் என்றால் சரிதான். மேற்படி உயிலை இந்த வழக்கில் தாக்கல் செய்யாததற்கு காரணம் உள்ளதா என்றால் காரணம் ஒன்றுமில்லை ஆனால் உயில் வைத்துள்ளேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் ஆட்டோ சீட் தயாரித்து கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன்.

12. 29.01.2021ம் தேதியிட்ட பிவாசாஆ.1 அறிவிப்பில் நான் சொல்லும் உயில் படியோ அல்லது கட்டுகுத்தகை சம்சாரி என்ற முறையிலோ தாவா சொத்தை அனுபவித்தாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்ட காலத்தில் தங்கம்மாள் தாவா சொத்திற்கு உரிமையாளர் இல்லை என்றால் சரிதான். மேற்படி சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்ட காலத்தில் தங்கம்மாள் உயிருடன் இருந்தார் என்று சொன்னால் இல்லை. தங்கம்மாள் இறந்தது 28.01.2021 என எனது எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

13. பிவாசாஆ 1 அறிவிப்பில் கண்ட வாறு தாவா சொத்து எனது அனுபவித்திலோ அல்லது எனது தகப்பனார் அனுபவித்திலோ இருந்தது கிடையாது என்றால் சரியில்ல. வாதி கணேசன் என்பவர் பெயருக்கு தாவா சொத்தை அவர் அனுபவித்து வருவதற்கு கிராம நிர்வாக அலுவலர் அடங்கல் வழங்கியுள்ளார் என்றால் தங்கம்மாள் இறந்த பின்னர் தான் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அடங்கல் விவரம் தெரியும். அடங்கல், பட்டா, தீர்வை ஆகிய ஆவணங்கள் சொத்து யாருடைய அனுபவித்தில் உள்ளதோ அவர்கள் பெயருக்கு தான் வழங்கப்படும் விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான்.

14. தாவா சொத்திற்கு நான் எந்த காலத்திலும் தீர்வை செலுத்தியது இல்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்திற்கு என் பெயரையும் சேர்த்து பட்டா மாற்றம் செய்ய கோரி வருவாய் துறையில் எந்த முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ 2, பிவாசாஆ 3 ஆவணங்கள் ஆனது என்னுடைய அனுபவித்தில் இருந்ததாக கூறப்பட்டுள்ளது முற்றிலும் பொய்யானது என்றால் சரியல்ல.

15. பிவாசாஆ 6 ஆனது எனது தாயார் பேட்டை, காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு என்றால் சரிதான். பிவாசாஆ 6 ல் தாவா சொத்தை எனது தாயார் அனுபவம் செய்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும் எனது அம்மாவும் சேர்ந்து தான் விவசாயம் செய்து வந்தோம். நானோ எனது தாயாரோ தாவா சொத்தை எந்த காலத்திலும் அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல.

16. நான், வாதி சொத்தின் உரிமையாளர் என்றும் அவர் அனுபவத்தில் உள்ளது என்பதை தெரிந்து கொண்டு பிவாசாஆ 1 முதல் 3 அறிவிப்புகளும், பிவாசாஆ.5 ஆன புகார் மனுவும் பொய்யாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வயலில் விளைந்த பயிரை வாதி நாசப்படுத்திவிட்டார் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரிதான். நான், திருநெல்வேலி வட்டாட்சியரிடம் கொடுத்த மனுவில் தாவா சொத்தின் பட்டா வாதி பெயரில் உள்ளதாகவும் அவர் அனுபவத்தில் உள்ளதாகவும், அடங்கல் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறி மனு கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். பிவாசாஆ 8 ல் வட்டாட்சியர் சொத்து சம்பந்தமாக வழக்கு நிலுவையில் இருப்பதால் வழக்கு முடிந்த பின்பு பதில் தரப்படும் என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

17. நான் அனுப்பிய பிவாசாஆ 9 அறிவிப்பில் வாதியின் பெயருக்கு தங்கம்மாள் எழுதிக் கொடுத்த கிரையம் மோசடியானது என குறிப்பிட்டு இருப்பது முற்றிலும் பொய் என்று சொன்னால் சரிதான். மேற்படி பிவாசாஆ 9 அறிவிப்பானது வழக்கிற்கு பிந்தைய அறிவிப்பு என்று சொன்னால் சரிதான். பிவாசாஆ 10 ஆனது வழக்கிற்கு பின்பு நான் கிராம நிர்வாக அலுவலருக்கு கொடுத்த மனு என்று சொன்னால் சரிதான். பிவாசாஆ 11 ஐ பார்த்தால் எந்த சொத்திற்காக வழங்கப்பட்டது என துலங்கானது என்றால் சரிதான். பிவாசாஆ 12 மற்றும் பிவாசாஆ.14 ஆணவமானது எந்த சொத்திற்கு வழங்கப்பட்டது என துலங்காது என்று சொன்னால் சரிதான்.

18. பிவாசாஆ 11, பிவாசாஆ 12, பிவாசாஆ 14, பிவாசாஆ 15 ஆனது இந்த வழக்கிற்கு பிந்தைய ஆவணங்கள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து வழியாக தான் சர்வே எண். 533/2 க்கு செல்ல முடியும் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து வழியாக செல்வதை வாதி மறித்ததாக தான் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு தாவா சொத்தில் எந்த அனுபவமும் எந்த காலத்திலும் இல்லை என்றால் சரியல்ல.

19. நான் வேண்டுமென்றே வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்ய முயற்சித்ததால் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. வாதி இந்த வழக்கில் கேட்டிருந்த பரிகாரம் அவருக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 18.11.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.11.18 18:07:03 +0530

Principal District Munsif,
Tirunelveli.